Australian Government
Department of Home Affairs

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து இடையே தனிமைப்படுத்தல் தேவையில்லா பயணம் 18 ஏப்ரல் 2021 அன்று 21:59 AEST இல் தொடங்கும். அவுஸ்திரேலியா அல்லது நியூசிலாந்தில் 14 நாட்களாக இருக்கின்ற **அனைத்து பயணிகளும்** பயணக் கட்டுப்பாடுகளிலிருந்து சலுகை பெற விண்ணப்பிக்க வேண்டிய அவசியமின்றி, அவுஸ்திரேலியாவிற்கும் நியூசிலாந்துக்கும் இடையில் தனிமைப்படுத்தல் இல்லாமல் பயணம் செய்யலாம்.

பாதுகாப்பான பயண மண்டல நாட்டில் 14 நாட்களையும் கழித்த பயணிகள் **அல்லது** 14 நாட்களுக்குள் திரும்பி வருகின்ற, இரு நாடுகளுக்கு இடையில் பயணித்துள்ளவர்கள் இதில் அடங்குவர்.

அவுஸ்திரேலியா அல்லது நியூசிலாந்தில் (வெளிநாட்டினர் உட்பட) வசிக்கும் அனைத்து மக்களும் ஒவ்வொரு நாட்டிலும் சுகாதாரம், குடியேற்றம் மற்றும் பிற நிலையான எல்லை அனுமதித் தேவைகளை பூர்த்தி செய்யும் வரை தனிமைப்படுத்தல் இல்லாத இலவசப் பயணத்தைப் பயன்படுத்தலாம்.

தனிமைப்படுத்தப்பட வேண்டிய தேவைகள் சில சூழ்நிலைகளில் பொருந்தக்கூடும் என்பதால் அனைத்து பயணிகளும் தங்களது வருகை மற்றும் இறுதி இடத்தின் இரு இடங்களிலும் ஏற்பாடுகளைச் சரிபார்க்க வேண்டும்.

நியூசிலாந்து சுகாதார மற்றும் குடியேற்றத் தேவைகள் அவர்களின் இணையதளத்தில் கிடைக்கின்றன: நியூசிலாந்தின் தனிமைப்படுத்தல் தேவையின்மைக்கான பயணத் தேவைகள்

மேலதிகத் தகவலுக்கு, அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் சுகாதாரத் திணைக்களத்தைப் பார்க்கவும்: சர்வதேச பயணர்களுக்கான கொரோனா வைரஸ் (COVID-19) குறித்த அறிவுரை

**குறிப்பு:** அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் COVID-19 சூழ்நிலையில் ஏற்படுகிற மாற்றம் எதுவும், எந்தவித முன்னறிவிப்புமின்றி தனிமைப்படுத்தல் அல்லாத பயண ஏற்பாடுகளை இடைநிறுத்தவோ நிறுத்தவோ வழிவகுக்கும். அவுஸ்திரேலியாவுக்குத் திரும்புவது தாமதமாகுதல் உட்பட, உங்கள் பயணத் திட்டங்களுக்கு ஏதேனும் இடையூறு ஏற்படுவதைக் கையாள நீங்களே பொறுப்பாவீர்கள்.

# நியூசிலாந்துக்கு வெளியே உள்ள நியூசிலாந்து குடிமக்கள்

நியூசிலாந்திற்கு வெளியே உள்ள நியூசிலாந்து குடிமக்கள் அல்லது அவுஸ்திரேலியாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பயணத்திற்கு சரியாக 14 நாட்களுக்கு முன்னதாக நியூசிலாந்தில் இல்லாதவர்களுக்கு தனிமைப்படுத்தல் இல்லாத பயணம் பொருந்தாது.

# COVID-19 பெருந்தொற்று இடங்கள்

பெருந்தொற்று பரவியுள்ள நியூசிலாந்து இடங்களின் பட்டியலுக்கு அவுஸ்திரேலிய பயணப் பிரகடன பக்கத்தைப் பார்க்கவும். குறிப்பிட்ட காலங்களில் நீங்கள் இந்த இடங்களுக்குச் சென்றிருந்தால், இதை உங்கள் அவுஸ்திரேலிய பயணப் பிரகடனத்தில் குறிப்பிட வேண்டும்.

# தனிமைப்படுத்தல் இல்லாமல் நியூசிலாந்திலிருந்து அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்தல்

நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குப் புறப்படுவதற்கு குறைந்தபட்சம் 72 மணித்தியாலங்களுக்கு முன்னதாக அவுஸ்திரேலிய பயணப் பிரகடனத்தை பூர்த்திசெய்ய வேண்டும்.

அவுஸ்திரேலிய பயணப் பிரகடனமானது அவுஸ்திரேலியாவில் உங்கள் தொடர்பு விபரங்கள், விமான விபரங்கள், தனிமைப்படுத்தல் தேவைகள், உங்கள் சுகாதார நிலை ஆகியவற்றைச் சேகரிக்கும்.

இந்தத் தகவல்கள் அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு உங்கள் தனிமைப்படுத்தல் ஏற்பாடுகளைத் தீர்மானிக்க உதவுவதுடன் (தேவைப்பட்டால்) COVID-19 தொற்றுடைய ஒருவர் உங்களுடன் பயணம் செய்திருந்தால், அதுபற்றி மேலும் விபரம் அறிய சம்பந்தப்பட்ட சுகாதாரத் திணைக்களங்கள் உங்களைத் தொடர்பு கொள்ள அனுமதிக்கிறது.

நீங்கள் **விமானம்** மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வருகிறீர்கள் என்றால், நீங்கள் பயணம் செய்வதற்கு முன்பு 14 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் அவுஸ்திரேலியா அல்லது நியூசிலாந்தில் இருந்திருந்தால், அவுஸ்திரேலியாவின் பயணக் கட்டுப்பாடுகளுக்கு சலுகை அளிக்க நீங்கள் விண்ணப்பிக்கத் **தேவையில்லை.** நீங்கள் தானாகவே பயணக் கட்டுப்பாடுகளிலிருந்து சலுகைப் பெறுவீர்கள்.

மேற்கூறிய அளவுகோல்களை நீங்கள் பூர்த்தி செய்தால், தனிமைப்படுத்தல் இல்லாத நியூசிலாந்திலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு பயணம் செய்ய நீங்கள் ஒரு நியூசிலாந்து குடிமகனாக இருக்க வேண்டிய தேவையில்லை, ஆனால் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய உங்களுக்கு **செல்லுபடியாகும் விசா தேவைப்படும்**. நியூசிலாந்து குடிமக்கள் அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்கு முன்பு விசாவிற்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை. தகுதி இருந்தால், வருகையின்போது அவர்களுக்கு சிறப்பு வகை விசா (துணைப்பிரிவு 444) (SCV) வழங்கப்படும்.

பின்வருவனவற்றில் ஏதேனும் இருந்தால், நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு முன்பு பயணக் கட்டுப்பாடுகளுக்கான சலுகைக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டியிருக்கும்:

- நீங்கள் திட்டமிட்ட புறப்படுதலுக்கு 14 நாட்களுக்குள் அவுஸ்திரேலியா அல்லது நியூசிலாந்தில் இருந்தீர்கள் (நியூசிலாந்து வழியாக பயணிப்போர் உட்பட), அல்லது
- நீங்கள் கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல விரும்புகிறீர்கள்.

# அவுஸ்திரேலியாவிலிருந்து நியூசிலாந்திற்கு தனிமைப்படுத்தல் இல்லாத பயணம் செய்தல்

மேற்கூறிய அளவுகோல்களை நீங்கள் பூர்த்தி செய்தால், அவுஸ்திரேலியாவிலிருந்து நியூசிலாந்திற்கு தனிமைப்படுத்தல் இல்லாத பயணம் செய்ய நீங்கள் ஒரு அவுஸ்திரேலிய குடிமகனாகவோ அல்லது நிரந்தர வசிப்பாளர்களாகவோ இருக்க வேண்டிய தேவையில்லை. இருப்பினும் நீங்கள் நியூசிலாந்து அரசாங்கத்தின் சுகாதார முன்நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் மற்றும் அனைத்து நிலையான குடியேற்றம், சுங்க மற்றும் உயிர் பாதுகாப்பு நுழைவுத் தேவைகள் பொருந்தும்.

# அவுஸ்திரேலியாவிலிருந்து நியூசிலாந்திற்குப் பயணம் செய்தல்: பயணக் கட்டுப்பாடுகளுக்கு சலுகை பெற தேவையானவை

நீங்கள் நேரடியாக நியூசிலாந்திற்குப் பயணம் செய்கிறீர்கள் என்றால், நீங்கள் புறப்படும் தேதிக்கு உடனடியாக 14 வார நாட்களில் அவுஸ்திரேலியா அல்லது நியூசிலாந்தில் மட்டுமே இருந்திருந்தால், அவுஸ்திரேலியாவின் பயணக் கட்டுப்பாடுகளுக்கு சலுகை பெற நீங்கள் விண்ணப்பிக்கத் **தேவையில்லை***. நீங்கள் தானாகவே பயணக் கட்டுப்பாடுகளிலிருந்து சலுகைப் பெறுவீர்கள்.

*அவுஸ்திரேலிய குடிமக்கள் மற்றும் நிரந்தர வசிப்பாளர்கள் நியூசிலாந்திற்கு பயணம் செய்வதற்கு முன் வெளிப்புறப் பயணக் கட்டுப்பாடுகளுக்கான சலுகைக்கு **விண்ணப்பிக்க வேண்டும்**:

- நியூசிலாந்திலிருந்து மற்றொரு வெளிநாட்டு இடத்திற்கு **ஒரு விமானத்தில் முன்பதிவு** செய்துள்ளீர்கள்

நியூசிலாந்தில் இருந்து வேறொரு சர்வதேச நாட்டிற்குப் பயணிப்பவர்கள், அவுஸ்திரேலியா அல்லது நியூசிலாந்திற்குத் திரும்புவது கடினமாக இருக்கும் என்பதை அறிந்திருக்க வேண்டும், பயணிகள் எண்ணிக்கையில் தற்போதைய கட்டுப்பாடுகளும் குறைந்த அளவிலான விமானங்களே கிடைக்கின்றன என்பதுமே இதற்குக் காரணம்.

நியூசிலாந்திலிருந்து வேறொரு சர்வதேச நாட்டிற்குப் பயணம் மேற்கொண்டு பின்னர் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்ப விரும்புவோர் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும்:

- அவுஸ்திரேலியாவுக்கு புறப்படுவதற்கு 72 மணிநேரம் முன்பு எடுக்கப்பட்ட எதிர்மறை COVID-19 பரிசோதனை முடிவை வைத்திருக்க வேண்டும்
- வருகை தந்த பின் 14 நாட்கள் கட்டாயமாக்கப்பட்ட தனிமைப்படுத்தலை தங்கள் சொந்த செலவில் விடுதியில் மேற்கொள்ள வேண்டும், மற்றும்
- கட்டாயமாக்கப்பட்ட தனிமைப்படுத்தலில் இருக்கும்போது அவ்வப்போது பரிசோதனைக்கு உட்பட வேண்டும்.

இந்த நேரத்தில் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்புவதற்கும், பல நாடுகளில் COVID-19 இலிருந்து மீளுவதற்கும் இடையூறு ஏற்படுவது உட்பட சர்வதேசப் பயணங்களால் ஆபத்துகள் ஏற்படுகின்றன.

# அவுஸ்திரேலியா வழியாக நியூசிலாந்துக்குப் பயணம் செய்தல்

அவுஸ்திரேலியா வழியாக பயணம் செய்ய விரும்பும் பயணிகளால், ஆரம்ப மண்டல நுழைவுக்கு 72 மணிநேரத்திற்குள் அவுஸ்திரேலியாவிலிருந்து புறப்படும் சிவப்பு மண்டல விமானத்தில் ஒரு பயணச்சீட்டைப் பெற முடிய வேண்டும். **பொருத்தமான சிவப்பு மண்டல இணைப்பு விமானம் கிடைக்கவில்லை என்றால், அவுஸ்திரேலியா வழியான பயணம் சாத்தியமில்லை.** அவுஸ்திரேலியா வழியாகப் பயணம் செய்வதற்கான மேலதிகத் தகவல்களை அவுஸ்திரேலியா வழியாக பயணம் என்ற இணையத்தளத்தில் காணலாம்.

# அவுஸ்திரேலியாவிற்குள் வருகை

14 நாட்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்குள் நுழைய வேண்டிய பிற பயணிகளிடமிருந்து தனிமைப்படுத்தல் தேவையற்ற விமானத்தில் பயணம் செய்த பயணிகளைப் பிரிப்பதை உறுதி செய்வதற்காக அவுஸ்திரேலியாவின் விமான நிலையங்களில் பச்சை மற்றும் சிவப்பு மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நீங்கள் தனிமைப்படுத்தல் தேவையற்ற விமானத்தில் பயணம் செய்தால், அவுஸ்திரேலியாவுக்கு வரும் விமான நிலையத்தில் அனைத்து எல்லை அனுமதிச் செயல்முறைகளையும் பூர்த்தி செய்ய பச்சை மண்டலம் வழியாக நீங்கள் வழிநடத்தப்படுவீர்கள்.

தனிமைப்படுத்தல் தேவையற்ற விமானங்களில் பயணிப்பவர்களுக்கான மேலதிகத் தகவல்களுக்கு சுகாதார திணைக்கள இணையதளத்தைபார்க்கவும்.